

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (29.07.2025) திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட உறையூர் வெக்காளியம்மன் கோவில் தெரு காவிரி மஹாலில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்வதையும் முகாமின் செயல்பாடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே. சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், மாவட்ட நகர் ஊரமைப்புக்குழு உறுப்பினர் க. வைரமணி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நெடுஞ்சாலைகள் நிலமெடுப்பு) ஆர்.பாலாஜி, நகரப் பொறியாளர் சிவபாதம், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

புலிகளைப் பாதுகாப்பதன் வழியே

# காடுகளின் ஆன்மாவை நாம் பாதுகாக்கிறோம்!

## உலகப் புலிகள் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜூலை 30-**

**புலிகளைப் பாதுகாப்பதன் வழியே நம் காடுகளின் ஆன்மாவை நாம் பாதுகாக்கிறோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'உலகப் புலிகள் நாளையொட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

உலகப் புலிகள் நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

உலகப் புலிகள் நாளில் தமிழ்நாடு பெருமிதத்துடன் முழங்குகிறது!

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத் தரவுகளின்படி, 306 புலிகளைக் கொண்டுள்ளது தமிழ்நாடு. இந்த வெற்றிக்குக் காரணம், கடினமான பகுதிகளில், முக்கியத்துவம் மிகுந்த புலிகளின் வாழிடங்களைப் பாதுகாக்கும் நமது வனத் துறைப் பணியாளர்களும், வேட்டைத் தடுப்பு அணியினரும்தான்.

வனங்களைப் பாதுகாக்கும் பணியினை மேம்படுத்திட,

1,947 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன, வனத்துறையினருக்கு நவீன உடைகள், தொழில்நுட்பக் கருவிகள் வழங்கப்படுகின்றன, கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அயல் ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றி, புலிகளின் வாழிடங்கள் மீளுருவாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. காடுகளின் வளம் மேம்படுத்தப்படுகிறது.

கானுயிர் மீதான குற்றங்கள் புரியும் கும்பல்களை அடக்க, தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு (TNWFCCB) எனும் சிறப்புப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

புலிகளைப் பாதுகாப்பதன் வழியே, நம் காடுகளின் ஆன்மாவை நாம் பாதுகாக்கிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும் – மீன்பிடிப் படகுகளையும்

# உடனடியாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகள் எடுத்திடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, ஜூலை 30-**

**இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்கள், நேற்று (29.07.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப்படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு நேற்று (29.07.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தடையின்றி கைது செய்யப்படுவதை ஆழ்ந்த வேதனையுடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இன்று (29-07-2025) காலை இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் இயந்திரமயமாக்கப்பட்ட தங்களது மீன்பிடிப் படகுடன் சிறை பிடிக்கப்பட்டிருப்பதையும், மற்றொரு சம்பவத்தில் ஒன்பது மீனவர்கள் மோட்டார் பொருத்தப்பட்ட தங்களது நாட்டுப்படகுடன் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளதையும் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவங்கள் ஒரு வாரத்திற்கு முன்பு நடந்த மற்றொரு சம்பவத்தின் தொடர்ச்சியாக நடைபெற்றிருப்பதையும், அச்சம்பவத்தில் நான்கு மீனவர்கள் தங்களது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுடன் இதேபோன்று கைது செய்யப்பட்டதையும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த மாதத்தில் மட்டும் இது நான்காவது சம்பவம் என்றும் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பெருத்த மனரீதியான மற்றும் பொருளாதார நெருக்கடியையும், வாழ்வில் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போது, 235 மீன்பிடிப் படகுகளும், 68 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளதாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, இலங்கை அதிகாரிகளின் பிடியில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் - மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும்

# இளைஞர் அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

*திருவள்ளூர், ஜூலை 30*

*திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு*

*திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் 31072025 (வியாழக்கிழமை) நாளை காலை 10 மணியளவில் பூவிருந்தவல்லி, ஹரிஹரன் ரெசிடென்சியில் நடைபெறுகிறது மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜி தலைமை வகிக்கிறார்*



*பூவிருந்தவல்லி நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்*

*பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆதிதிராவிட நல குழு அணி செயலாளருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில இளைஞரணி துணைச்செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், ப.அப்துல் மாலிக், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி. ஜெரால்டு, தொகுதி பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ் நிவேதாஜெசிகா மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா,நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ். ஜி. ராஜேந்திரன், ஜி.விமல் வர்ஷன், எம். முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ. மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்*

*கூட்டம் முடிவில் நகர இளைஞர் அணி அமைப்பாளர் முகமது ராஷிக் ஹனீப் நன்றி கூறுகிறார்*

*அது சமயம் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்*

*பொருள் :*

*சட்டமன்ற தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு களப்பணி மற்றும் சமூக வலைத்தளம் பயிற்சி கூட்டம் குறித்து.*

*கிளை கழகம் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனம் குறித்து.*

*ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு பணிகள் குறித்து என மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொண்டார்.*

ஒருங்கிணைந்த வடிவமைப்பு – இயங்குபட வடிவமைப்பு – காட்சி வழித் தொடர்பு!

# கும்பகோணம் - அரசு கவின் கலைக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை!

## கலை – பண்பாட்டுத் துறை இயக்குநர் அறிவிப்பு!

*சென்னை, ஜூலை 30-*

*அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம் - 2025-2026 ஆம் கல்வியாண்டு - இளங்கலைப் பட்டப் படிப்பு - ஒருங்கிணைந்த வடிவமைப்பு (Integrated Design) மற்றும் இயங்குபட வடிவமைப்பு மற்றும் காட்சிவழித் தொடர்பு (Animation and Visual effects) ஆகிய இரண்டு பிரிவுகளில் மாணாக்கர் சேர்க்கைக்கு விண்ணப்பங் கள் வரவேற்கப்படுகிறது என கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு :-*

*அமைச்சர் அவர்களின் 2025-2026ஆம் ஆண்டிற்கான அறிவிப்பில் தெரிவித்துள்ளவாறு, கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கவின்கலை பட்டப்படிப்புகளும் மற்றும் இரண்டாண்டு முதுகவின்கலைப் பட்டப்படிப்புகளும் பயிற்றுவிக்கப்பட்டு வரும் நிலையில், மாணாக்கர்களின் கல்வி நலன் கருதி, தற்போது இக்கல்லூரியில் மாணர்களிடையே பெரிதும் வரவேற்பு பெற்றுள்ள ஒருங்கிணைந்த வடிவமைப்பு (Integrated Design) மற்றும் இயங்குபட வடிவமைப்பு மற்றும் காட்சிவழி தொடர்பு (Animation and Visual effects) ஆகிய இரண்டு பிரிவுகளில் புதிதாக நான்காண்டு இளங்கலை பட்டப்படிப்புகள் 2025-2026ஆம் கல்வி ஆண்டு முதல்துவங்கப்படவுள்ளன. மேற்காண் பட்டப்படிப்புகளுக்கு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.*

*மேற்காண் பாடப் பிரிவுகளில் பயில விருப்பம் உள்ள மாணாக்கர்கள் 09.08.2025 அன்று மாலை 06.00 மணிக்குள் கலை பண்பாட்டுத்துறையின் www.artandculture.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம் என அவ்வறிப்பில் கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.*




முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று (29.7.2025) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும், சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் "முதல்வர் படைப்பகங்கள் விரைவில் பணிகள் தொடங்குவது குறித்தும் மற்றும் அப்பணிகளுடன் சேர்ந்து நடைபெற்று வரும் இதரப் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியம், ந.ரவிக்குமார், தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 'ஓரணியில் தமிழ்நாடு'

## பணிகள் - காணொலி வாயிலாக BLA-2 மற்றும் BDA க்கள் சற்றொப்ப 4000 பேருடன்

மாவட்ட கழகச் செயலாளர்-அமைச்சர்

## மா.சுப்பிரமணியன் கலந்துரையாடல்!



சென்னை தெற்கில் 'ஓரணியில் தமிழ்நாடு' பணிகள் குறித்து காணொலி வாயிலாக **வரும் 31.07.2025 வியாழக்கிழமை மாலை 6 மணி அளவில்** சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட 11 பகுதிக் கழகங்கள், 2 ஒன்றியக் கழகங்களை சார்ந்த BLA-2 மற்றும் BDA-க்கள் சற்றொப்ப 4000 பேருடன் கலந்துரையாடுகிறார்.

எனவே இந்த காணொலி வாயிலாக நடைபெறும் கலந்துரையாடல் கூட்டத்தில் அந்தந்த பகுதி,ஒன்றியக் கழகங்களுக்குட்பட்ட பகுதி கழக செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் குறித்த நேரத்தில் பங்கேற்றிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க